**<u>சார்பு நீதிமன்றம், துறையூர்.</u>**

**முன்னிலை .. திரு. எம்.ஜெய்சங்கர், M.A,B.L.,**

**சார்பு நீதிபதி,**

**துறையூர்.**

**2024-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29-ம் நாள் திங்கள்கிழமை**

**<u>இடைநிலை மனு எண்.3/2024 in அசல் வழக்கு எண்.17/2024</u>**

முருகானந்தம் ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. சுப்ரமணியன்
2. தனலெட்சுமி
3. வசந்தா
4. இந்திராணி
5. சுகுணா
6. மணிகண்டன் ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 25.04.2024 என் முன்பாக இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.P. ஜனார்த்தனன் அவர்களும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K. செல்லதுரை அவர்களும் 4,5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் V. செல்வக்குமார் அவர்களும், ஆஜராகி 3,6 எதிர்மனுதாரர்களை அழைத்தும் ஆஜராகாததால் தோன்றாதரப்பினராக்கப்பட்டும், இருதரப்பு வாதங்கள் கேட்டும், மனுக்கள், ஆவணங்களை பரிசீலனை செய்து நீதிமன்றம் வழங்கும்...

**<u>உத்தரவு</u>**

இவ்வழக்கில் காலதாமதமாக தாக்கல் செய்யும் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு வழக்கை மேல்நடத்த உ.வி.மு.ச கட்டளை 7, விதி 14 மற்றும் பிரிவு 151 -ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டது.

**<u>மனுதாரரின் மனு சுருக்கம் :-</u>**

2.மனு சொத்துக்களை நல இளப்பம் சரிகட்டி 6 சம பாகங்களாக பிரித்து அதில் 6-ல் 1 பாகம் மனுதாரருக்கு உண்டு என்ற பாகப்பிரிவினை பரிகாரம் கோரியும், மேலும்

2-ம் எதிர்மனுதாரரும் 5-ம் எதிர்மனுதாரரும் சேர்ந்து போலியாக உருவாக்கிய 14.12.2020 -ம் தேதியிட்ட ஆவண எண்.6199/2020 என்ற போலியான செட்டில்மெண்ட் பத்திரம் மனுதாரரை எந்த வகையிலும் கட்டுப்படுத்தாது என்றும் அந்த செட்டில்மெண்ட் பத்திரம் செல்லா நிலையது என்றும், மேலும் 2-ம் எதிர்மனுதாரரும் 4-ம் எதிர்மனுதாரரும் சேர்ந்து போலியாக உருவாக்கிய 14.12.2020 -ம் தேதியிட்ட ஆவண எண்.6200/2020 என்ற போலியான செட்டில்மெண்ட் பத்திரம் மனுதாரரை எந்த வகையிலும் கட்டுப்படுத்தாது என்றும், அசல் வழக்கை மனுதாரர் தாக்கல் செய்துள்ளார்.

3.அசல் வழக்கில் மனுதாரர் தரப்பு ஆவணங்களான இந்த 1-ம் எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் எழுதிக்கொடுத்த சான்றை தற்போது தான் தகவல் கிடைத்து வாங்கியதாகவும், இவற்றையெல்லாம் மனுதாரர் வழக்குரையில் சொல்லியுள்ளதை 1,2,4,5 எதிர்மனுதாரர்கள் மறுத்துள்ளதாகவும், மேற்படி விவரங்கள் உண்மை என நிரூபணம் செய்ய வேண்டி இந்த ஆவணங்களை தாக்கல் செய்வதாகவும், மேலும் இந்த வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு 1,2 மற்றும் 4-ம் எதிர்மனுதாரர்களின் அத்துமீறல் மற்றும் அடாவடித்தனம் அதிகமாகிவிட்டது மனுதாரரை கத்தியால் குத்தும் அளவிற்கு வந்துவிட்டார்கள். அதற்காக மருத்துவமனை சான்று காவல் நிலைய புகார்மனு ரசீது ஆகியவை தாக்கல் செய்யப்படுகிறது. மேலும் இந்த தாவா தாக்கல் செய்த பின்னிட்டு 1,2 மற்றும் 4-ம் எதிர்மனுதாரர்கள் மனுதாரருக்கு செய்த கொடுமைகளையும் நடந்த அநியாயங்களையும் மனுதாரர் பொருத்தியுள்ள CCTV கேமராவில் படம் பிடிக்கப்பட்டதை பென்ட்ரைவர் காப்பியையும் இணைத்துள்ளதாகவும், இதை பார்த்தால் தான் மனுதாரருக்கு நேர்ந்த கொடுமைகள் தெரியவரும். இவையெல்லாம் இந்த வழக்கிற்கு பின்னிட்டு நடந்தவையாகும். அதனால் தான் வழக்குரையுடன் தாக்கல் செய்ய இயலவில்லை. எனவே, காலதாமதத்தை மன்னித்து மனுவை அனுமதித்து ஆவணங்களை ஏற்றுக்கொள்ள வேண்டுமென கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1,2 எதிர்மனுதாரர்களின் எதிருரை சுருக்கம்:-**

4.மனுதாரரின் மனு பொய்யும் மோசடியுமானது. மனுதாரர் மனுவில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல. இந்த எதிர்மனுவுரையில் எதிர்மனுதாரர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள சங்கதிகளைத்தவிர இதர சங்கதிகள் மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். மனு சொத்துக்களை நல இளப்பம் சரிக்கட்டி 6 சம பாகங்களாக பிரித்து அதில் 6ல் 1 பாகம் மனுதாரருக்கு உண்டு என்ற சங்கதி 1, 2 எதிர்மனுதாரர்களால் மறுக்கப்படுகிறது. மனு சொத்துக்கள் 1ம் எதிர்மனுதாரரின் கடின உழைப்பால் 1, 2 எதிர்மனுதாரர்களின் பெயரில் வாங்கப்பட்ட சொத்துக்களாகும். 2ம் எதிர்மனுதாரர் 5ம் எதிர்மனுதாரருக்கு எழுதி கொடுத்த 14.12.2020ம் தேதியிட்ட ஆவண எண்.6199/2020 என்ற செட்டில்மெண்ட் பத்திரமும் மற்றும் 2ம் எதிர்மனுதாரர் 4ம் எதிர்மனுதாரருக்கு 14.12.2020ம் தேதியிட்ட ஆவண எண்.6200/2020 எனற் செட்டில்மெண்ட் பத்திரங்கள் சட்டப்படியான ஆவணங்களாகும். அவற்றை Null & Void என்றும், செல்லாது என்றும் சொல்ல மனுதாரருக்கு எவ்வித அருகதையும், உரிமையும் இல்லை. மேலும் மேற்படி செட்டில்மெண்ட பத்திரங்கள் செல்லாது என்று அறிவிக்க கோரிய பரிகாரம் கால வரம்பு சட்டத்தால் மனுதாரருக்கு கிடைக்கக்கூடியதல்ல.

5.மேற்படி மனுவில் சொல்லப்பட்டுள்ள 1வது ஆவணம் எந்த தேதியில் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது என்று குறிப்பிடப்படாமல் உள்ளதிலிருந்தும் மேலும் மனுவின் இறுதியில் கையெழுத்து எதுவும்போடப்படாமல் இருப்பதிலிருந்தும் மேற்படி ஆவணம் போலியானது என்றும், மனுதாரரால் உருவாக்கப்பட்டது என்பதும் தெள்ளத்தெளிவாக தெரிய வருகிறது. காவல் நிலையத்திலிருந்து சட்டப்படி பெறப்பட்டிருந்தால் அவற்றில் சான்றொப்பம் இடப்பட்டிருக்கும். சான்றொப்பம் இடப்பாததில் இருந்து மேற்படி ஆவணம் போலியானது என்று இந்த எதிர்மனுதாரர்களால் மேற்படி ஆவணத்தை மறுக்கிறார்கள். மனுதாரரின் வழக்குரை முகவரி இந்த மனுவின் 2வது ஆவணத்தில் உள்ள முகவரி மற்றும் இந்த வழக்குரையில் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இதர ஆவணங்களில் உள்ள கதவு எண்.7/4 என்று குறிப்பிட்டு விட்டு தற்போது மேற்படி கதவு எண்ணிற்கு எவ்வித சம்மந்தமும் இல்லாத 4ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வீட்டில் மனுதாரர்

குடியிருந்து வருவதுபோல் காட்ட 4ம் பிரதிவாதிக்கு சொந்தமான வீட்டை ஆக்கிரமிப்பு செய்து குடியேற முயற்சி செய்து வருகிறார். மேலும் மேற்படி மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள 2வது ஆவணத்தில் 5ம் எதிர்மனுதாரர் சுகுணாவின் தகப்பனார் பெயர் சிவக்குமார் என்று உள்ளது. உண்மையில் 5ம் எதிர்மனுதாரரின் தகப்பனார் பெயர் சுப்ரமணியன் என்பதாகும்.

6.மேற்படி மனுவின் 3வது ஆவணத்தில் சாட்சிகள் என்ற இடத்தில் எந்த சாட்சிகளின் பெயர்களும் இல்லாமல் இருப்பதிலிருந்தும் மேற்படி ஆவணம் சம்மந்தப்பட்ட அலுவலகத்தில் சான்றொப்பம் பெறாமல் தாக்கல் செய்யப்பட்டிருப்பதில் இருந்தும் மேற்படி ஆவணம் நம்பகத்தன்மையை இழந்துவிடுகிறது. மேலும் மேற்படி ஆவணத்தில் 1ம் எதிர்மனுதாரர் குடியிருந்து வரும் வீட்டை மனுதாரருக்கு எழுதி கொடு என மிரட்டி வருவதையும் 1ம் எதிர்மனுதாரர் குடியிருந்து வரும் வீட்டின் ஒரு பகுதியை இந்த மனுதாரர் பூட்டு போட்டு பூட்டி 1ம் எதிர்மனுதாரருக்கு மிகுந்த மனஉளைச்சலையும் தொந்தரவையும் கொடுத்து வந்துள்ளார் என்பது மாண்புமிகு நீதிமன்றத்திற்கு தெள்ளத்தெளிவாக தெரியவருகிறது.

**<u>4,5 எதிர்மனுதாரர்களின் எதிருரை சுருக்கம்:-</u>**

7.மனுதாரரின் மனு பொய்யும் மோசடியுமானது. மனுதாரர் மனுவில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல. இந்த எதிர்மனுவுரையில் எதிர்மனுதாரர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள சங்கதிகளைத்தவிர இதர சங்கதிகள் மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். மனு சொத்துக்களை நல இளப்பம் சரிக்கட்டி 6 சம பாகங்களாக பிரித்து அதில் 6ல் 1 பாகம் மனுதாரருக்கு உண்டு என்ற சங்கதி 1, 2 எதிர்மனுதாரர்களால் மறுக்கப்படுகிறது. மனு சொத்துக்கள் 1ம் எதிர்மனுதாரரின் கடின உழைப்பால் 1, 2 எதிர்மனுதாரர்களின் பெயரில் வாங்கப்பட்ட சொத்துக்களாகும். 2ம் எதிர்மனுதாரர் 5ம் எதிர்மனுதாரருக்கு எழுதி கொடுத்த 14.12.2020ம் தேதியிட்ட ஆவண எண்.6199/2020 என்ற செட்டில்மெண்ட் பத்திரமும் மற்றும் 2ம் எதிர்மனுதாரர் 4ம் எதிர்மனுதாரருக்கு 14.12.2020ம் தேதியிட்ட ஆவண எண்.6200/2020 எனற் செட்டில்மெண்ட் பத்திரங்கள் சட்டப்படியான ஆவணங்களாகும். அவற்றை Null & Void என்றும், செல்லாது என்றும் சொல்ல மனுதாரருக்கு எவ்வித அருகதையும், உரிமையும்

இல்லை. மேலும் மேற்படி செட்டில்மெண்ட பத்திரங்கள் செல்லாது என்று அறிவிக்க கோரிய பரிகாரம் கால வரம்பு சட்டத்தால் மனுதாரருக்கு கிடைக்கக்கூடியதல்ல.

8.மேற்படி மனுவில் சொல்லப்பட்டுள்ள 1வது ஆவணம் எந்த தேதியில் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது என்று குறிப்பிடப்படாமல் உள்ளதிலிருந்தும் மேலும் மனுவின் இறுதியில் கையெழுத்து எதுவும்போடப்படாமல் இருப்பதிலிருந்தும் மேற்படி ஆவணம் போலியானது என்றும், மனுதாரரால் உருவாக்கப்பட்டது என்பதும் தெள்ளத்தெளிவாக தெரிய வருகிறது. காவல் நிலையத்திலிருந்து சட்டப்படி பெறப்பட்டிருந்தால் அவற்றில் சான்றொப்பம் இடப்பட்டிருக்கும். சான்றொப்பம் இடப்பாததில் இருந்து மேற்படி ஆவணம் போலியானது என்று இந்த எதிர்மனுதாரர்களால் மேற்படி ஆவணத்தை மறுக்கிறார்கள். மனுதாரரின் வழக்குரை முகவரி இந்த மனுவின் 2வது ஆவணத்தில் உள்ள முகவரி மற்றும் இந்த வழக்குரையில் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இதர ஆவணங்களில் உள்ள கதவு எண்.7/4 என்று குறிப்பிட்டு விட்டு தற்போது மேற்படி கதவு எண்ணிற்கு எவ்வித சம்மந்தமும் இல்லாத 4ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வீட்டில் மனுதாரர் குடியிருந்து வருவதுபோல் காட்ட 4ம் பிரதிவாதிக்கு சொந்தமான வீட்டை ஆக்கிரமிப்பு செய்து குடியேற முயற்சி செய்து வருகிறார். மேலும் மேற்படி மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள 2வது ஆவணத்தில் 5ம் எதிர்மனுதாரர் சுகுணாவின் தகப்பனார் பெயர் சிவக்குமார் என்று உள்ளது. உண்மையில் 5ம் எதிர்மனுதாரரின் தகப்பனார் பெயர் சுப்ரமணியன் என்பதாகும்.

9.மேற்படி மனுவின் 3வது ஆவணத்தில் சாட்சிகள் என்ற இடத்தில் எந்த சாட்சிகளின் பெயர்களும் இல்லாமல் இருப்பதிலிருந்தும் மேற்படி ஆவணம் சம்மந்தப்பட்ட அலுவலகத்தில் சான்றொப்பம் பெறாமல் தாக்கல் செய்யப்பட்டிருப்பதில் இருந்தும் மேற்படி ஆவணம் நம்பகத்தன்மையை இழந்துவிடுகிறது. மேலும் மேற்படி ஆவணத்தில் 1ம் எதிர்மனுதாரர் குடியிருந்து வரும் வீட்டை மனுதாரருக்கு எழுதி கொடு என மிரட்டி வருவதையும் 1ம் எதிர்மனுதாரர் குடியிருந்து வரும் வீட்டின் ஒரு பகுதியை இந்த மனுதாரர் பூட்டு போட்டு பூட்டி 1ம் எதிர்மனுதாரருக்கு மிகுந்த மனஉளைச்சலையும் தொந்தரவையும் கொடுத்து வந்துள்ளார் என்பது மாண்புமிகு நீதிமன்றத்திற்கு தெள்ளத்தெளிவாக தெரியவருகிறது.

10.இந்த மனுதாரர் 4ம் எதிர்மனுதாரரை தாக்கி அத்துமீறி கடந்த 23.03.2024ம் தேதி மதியம் 1 மணியளவில் 4ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வீட்டில் உள்ள நுழையும் போது 4ம் எதிர்மனுதாரர் வீட்டின் உள்ளே இருந்து தடுத்ததால் மனுதாரர் 4ம் எதிர்மனுதாரரை தாக்கி கீழே தள்ளிவிட்டு அசிங்கமான வார்த்தைகளால் பேசி வீட்டை காலி செய்து கொடுக்கும்படி மிரட்டியதால் 4ம் எதிர்மனுதாரரான இந்திராணி என்பவர் உடனடியாக துறையூர் காவல் நிலையத்தில் மனுதாரர் மீது புகார் கொடுத்தார். மேற்படி புகார் மீது துறையூர் காவல் நிலையத்தினர் மனு எண்.256/2024 என்ற எண்ணில் மனு ரசீது வழங்கியுள்ளனர். மேற்படி மனு எண்.256/2024ல் இந்த மனுவின் மனுதாரரான முருகானந்தத்தை காவல் துறையினர் விசாரணைக்கு அழைத்த போது விசாரணைக்கு ஆஜராகாமல் விசாரணையில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக வேண்டுமென்றே 24.03.2024ம் தேதி மாலை 6 மணியளவில் துறையூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்து உள்ளார். இந்த மனுவின் மனுதாரர் 4ம் எதிர்மனுதாரரை தாக்கி விட்டு அதிலிருந்து தப்பித்து கொள்வதற்காக உருவாக்கப்பட்ட ஆவணங்கள் தான் இந்த மனுவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 4 முதல் 6 ஆவணங்களாகும். பின்னிட்டு மேற்படி மனுவின் விசாரணைக்கு ஆஜரான இந்த மனுதாரர் தன் முகவரியில் 7/4 அங்காளம்மன் கோவில் தெருவில் கடந்த 15 வருடங்களாக வசித்து வருவதாகவே குறிப்பிட்டு விட்டு தற்பொழுது 4ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வீட்டில் குடியிருந்து வருவதாக கூறி தன்னை யாரும் குடியிருந்து வருவதை தொந்தரவு செய்யக்கூடாது என்று மாண்புமிகு நீதிமன்றத்தில் மோசடியான சங்கதியை சொல்லி மேற்படி மனுவும் இந்த மனுதாரரால் தாக்கல் செய்யப்பபட்டுள்ளது.

**<u>3,6 எதிர்மனுதாரர்கள் தோன்றா தரப்பினராக்கப்பட்டுள்ளார்கள்.</u>**

11.மனுதாரின் மனு, எதிர்மனுதாரரின் பதிலுரை ஆகியவை பரிசீலனை செய்ததில் இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை இம்மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா என்பாதாகும்.

**<u>தீர்வு..</u>**

12.இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் காலதாமதமாக தாக்கல் செய்யும் ஆவணங்களை ஏற்றுக்கொள்ளக்கோரி இம்மனுவை தாக்கல்

செய்துள்ளதாகவும், மேற்படி காலதாமதம் வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. வழக்கிற்கு பின்னிட்டு நடந்த சம்பவங்களை நிரூபிக்க தாக்கல் செய்யும் ஆவணங்கள் ஆகும். எனவே, மேற்படி காலதாமதத்தை மன்னிக்க வேண்டியது அவசியம் என்றும், தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கு எதிர்மனுதாரர்கள் தரப்பில் கடுமையாக ஆட்சேபிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களில் சான்றொப்பம் இடப்படவில்லை என்றும், எனவே, மேற்படி ஆவணங்கள் போலியானவை என்றும், எனவே, மனு தள்ளுபடிக்குரியது என்றும், தெரிவிக்கப்பட்டுள்ளது. இருதரப்பு மனுக்கள் ஆவணங்களை ஆய்வு செய்ததில் எதிர்மனுதாரர் தரப்பில் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் போலியானது என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஆவணங்களின் உண்மைத்தன்மை குறித்து வழக்கில் சாட்சியங்களை விசாரித்து இறுதி தீர்ப்பின்போது தான் நிர்ணயிக்க முடியும். Subject to proof and relevancy என்ற கோட்பாட்டின் அடிப்படையில் ஆவணங்களை ஏற்றுக்கொள்வதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக, மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இன்று 2024-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29-ம் நாள் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியபகரப்பட்டது.

(ஒம்)/- M. ஜெய்சங்கர்
சார்பு நீதிபதி,
துறையூர்.

**<u>மனுதாரர், எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் .. இல்லை.</u>**

(ஒம்)/- M. ஜெய்சங்கர்
சார்பு நீதிபதி,
துறையூர்.